வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# கீர்த்தித் திருவகவலில் காணலாகும் திருத்தலங்கள்

**அ.ஞா. உமாமகேஸ்வரி**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி – 02.

**முனைவர் சி. ஷகிலாபானு,**
ஆய்வு நெறியாளர் (ம) உதவிப் பேராசிரியர்
தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி – 02.

**முன்னுரை:**

தமிழின் இனிமைக்கு மேலும் இனிமை சேர்ப்பதாய் அமைந்தவை தான் பக்தி இலக்கியங்கள். ‘பக்தியின் மொழி தமிழ்’ என்பார் தனிநாயகம் அடிகளார். சைவம் தழைக்க நாயன்மார்கள் பாடிய பன்னிரு திருமுறைகளும், வைணவம் தழைக்க ஆழ்வார்கள் பாடிய நாலாயிர திவ்யபிரபந்தமும் பக்தியினூடே அறத்தையும் வாழ்வியல் நெறியையும் குழைத்துப் பாடிச் சென்றுள்ளனர் ஆழ்வார்களும் நாயன்மார்களும். பன்னிரு ஆழ்வார்களுள் தலைமை சான்றவராக நம்மாழ்வாரையும் நாயன்மார்களுள் மாணிக்கவாசகரையும் வைத்துப் போற்றுவர் அறிஞர் பெருமக்கள் பன்னிரு திருமுறைகளுள் சாதி சமயம் இனம் நாடு மொழி என அனைத்தையும் கடந்து படிப்போர் உள்ளத்தை நெகிழச் செய்யும் நூலாகத் திருவாசகம் திகழ்கின்றது என்றால் அது மிகையில்லை. தமிழ் கற்றோர் மட்டுமின்றி தமிழை அறியாத அயல்நாட்டவரையும் உள்ளம் உருகச் செய்த பெருமை பெற்ற நூலே திருவாசகம். அழுது அடியடைந்த அன்பராம் மாணிக்கவாசகரால் இயற்றப்பெற்ற திருவாசகத்தில் கீர்த்தி திருஅகவல் பகுதியில் பொதிந்துள்ள கருத்துக்களை முன்மொழிவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**ஆய்வுச் சுருக்கம்:**

சிவபுராணம் தொடங்கி அச்சோப் பதிகம் வரையிலான ஐம்பத்தொரு பகுதிகளைக் கொண்டது திருவாசகம். அதில் இரண்டாவதாக உள்ள கீர்த்தித் திருவகவல் பகுதியில் பாடப்பட்டுள்ள திருத்தலங்களின் பெருமையையும் சிறப்பினையும் இக்கட்டுரையில் ஆய்வு நோக்கில் காணலாம்.

**கலைச்சொற்கள்:**

கனகம் - பொன், தூவணம் - தூயநிறம், வழுக்காறு - தவறாது, பாவகம் - உவப்புடன் தரித்த வடிவம், அருத்தி - விருப்பமுடன், கழுமலம் - சீர்காழி, தர்ப்பணம் - கண்ணாடி

**கீர்த்தித் திருவகவல்:**

திருவாசகம் என்பது திருவுடைய சொற்களால் பாடப்பெற்ற அருள் நிறைந்த நூல். இரண்டாவது அகவல் (சிவனது திருவருட் புகழ்ச்சி முறைமை) சிவப்பெருமானின் மெய்ப்பாட்டினைக் காணவும் கருதவும் செய்யும் பொருட்டு அவர் அருள் திறத்தை தில்லையில் எடுத்தது கூறுவதால் கீர்த்தித் திருவகவல் எனப் பெயர் பெற்றது.

**தில்லை மூதூர்:**

திருத்தில்லை என்னும் ஊர் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே தோன்றியது. இது கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் உள்ளது. தில்லை என்ற ஊரின் கண் அமைந்த கோவில் சிதம்பரம் ஆகும், காலப்போக்கில் கோவிலின் பெயரே ஊருக்கும் ஆகி நின்றது. தில்லை மரங்கள் நிறைந்து காணப்பட்டதால் அது தில்லை என்றுப் பெயர் பெற்றது. மூதூர் - முதுமையான, பழமையான தில்லை மாநகர் உலக உயிர்களின் நெஞ்சத்தின் கண் இறைவன் இடைவிடாது நடனமாடிய திருக்கூத்தின் தொன்மையும் பழமையையும் கூறுவதால் இதனைப் பழையஊர் என்றனர். சமயக்குரவர்கள் நால்வராலும் பாடல்பெற்ற தலமாகும். 63 நாயன்மார்களில் ஒருவரான திருநீலகண்ட நாயனார் குயவர் குலத்தில் அவதரித்த தலமாகும்

இதற்கு புலியூர், அம்பலம், தில்லை வனம் என வேறு பெயர்களும் உண்டு. மூலவராக திருமூலநாதர் இறைவி உமையம்மையோடு கோவில் கொண்டுள்ளார். பஞ்சபூத தலங்களில் ஆகாயத்தலமாக விளங்குவது சிதம்பரம்.

**கல்லாடம்:**

கல்லாடம் என்னும் ஊரில் உமையம்மையோடு உமையொருபாகனாய் இன்பம் எய்தியவராய், ஆகமங்களை உமையம்யையோடு கல்லாடத்தில் இருந்து உபதேசித்தார் என்கிறது பழைய உரை.

**பஞ்சப்பள்ளி:**

பஞ்சப்பள்ளியென்பது- ஐவகையமளி என்பாரும் உளர். உயிர்களுக்கு இன்பத்தை அடைய உதவுதலைக் குறித்தது என்கின்றார். இவ்வூர் எங்குள்ளது என்பது அறியப்படவில்லை பஞ்சப்பள்ளி என்ற ஊர் கன்னடநாட்டில் விளங்கும் 'பஞ்சஹள்ளி' தலம் என்பதையும் குறிக்கிறது. பாலினினும் இனிய மொழியை உடையவளாகிய அம்மையுடன் குறையாது நிறையும் அருளை விளைவித்தும் இருக்கிறார்.

**நந்தம்பாடி:**

'நந்தம் பாடியில் நான்மறை யோனாய்'...?

நந்தம் பாடி என்னும் தலத்தில் நான்கு வேதங்களையும் ஓதி உணர்ந்த அறவோனாய் வந்து அளப்பரிய அறிவு படைத்த ஆசிரியனாய் எழுந்தருளினாய்.

**வேலம் புத்தூர்:**

வேலம் புத்தூரில் சிவபெருமான் சோமசுந்தர பாண்டியனாய், தடாதகை பிராட்டியாரோடு வந்து உக்கிரபாண்டியனுக்கு **வேல், வளை, செண்டு** கொடுத்து உதவினார். உக்கிரவர்மனின் பட்டாபிஷேகத்தின் போது சோமசுந்திரர் அவனுக்கு 'மதுரை நகர் கடலால் ஆட்கொள்ளப்படும் போது வேலை வீசி கடல் உள்வாங்கச் செய்து மக்களை காப்பாற்று இந்திரன் இடைஞ்சல் செய்யும் போது வளையை அவன் மகுடத்தில் வீசி அவனை அடக்கு மேருமலை அகங்காரம் கொள்ளும் போது இந்த செண்டால் அடித்து நொறுக்கு' என்றும் கூறி கொடுத்துவிட்டு பின் இறைவன் மறைந்து சொக்கநாதராகவும், மீனாட்சியம்மையாகவும் ஜோதியானர். சொக்கர் லிங்கவடிவில் எழுந்தருளியுள்ளார். பாண்டியனுக்கு வேல் படையைக் கொடுத்தமையால் அவ்வூர் வேலம் புத்தூர் என்றுப் பெயர் பெற்றது.

**சாந்தம் புத்தூர்:**

சாந்தம் புத்தூர் என்னும் பதியில் வில்லொடு சண்டைத் தொழில் செய்யும் வேடன் இறைவனை நோக்கி தவஞ்செய்ய அவன் விரும்பிய **வில்,வாள்,சூலம்** ஆகிய படைக்கலன்களை கண்ணாடியிலிருந்து தோற்றுவித்து உதவினார் என்பது வரலாறு மேலும் சாந்தம் புத்தூரில் வேடர்களுக்கு திலதர்ப்பணம் செய்ததாகவும் கூறப்படுகிறது. திலதர்ப்பணம் என்பது எள்ளும் நீரும் இறைத்தல் என்றும் கூறப்படுகிறது.

**உத்திரகோச மங்கை:**

மங்கள் நாத சுவாமி கோவில் இராமநாதபுரம் மாவட்டம், உத்திரகோச மங்கை என்னும் ஊரில் அமைந்துள்ளது. மூலவரான மங்களநாத சுவாமிகள் தாயார் மங்களேஸ்வரியோடு வீற்றிருக்கிறார். தென்கயிலாயம், பிரம்மபுரி, வேதபுதி எனப் பல பெயர்களைக் கொண்டது உத்திரக்கோச மங்கை.

பிரம்மனுக்காகப் புறம் கூறிய தாழம்பூவினால் தம்மை எவரும் அருச்சிக்கக்கூடாது எனச் சாபமிட்ட சிவ பெருமான் தாழம்பூவினால் இத்தலத்தில் மட்டும் தம்மை அருச்சிக்கலாம் என விதிவிலக்கருளிய பெருமையுடையது. திருவாசகத்தில் 38 இடங்களில் குறிப்பிடப்பட்ட திருத்தலங்களில் ஒன்று உத்திரகோச மங்கை கோவிலின் சுவற்றில் திருவாசகம் பொறிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. எக்கோவில்களிலும் காண முடியாத பெரிய மரகதத்தினால் ஆன லிங்கம் சிறப்புக்குறியது. இறைவன் இறைவிக்கு வேதாகம இரகசியங்களை உபதேசித்ததால் இது உத்திரகோச மங்கை எனப்பட்டது. சிவ பெருமான்

உத்திரகோச மங்கையில் ஞான உருவாய் நின்று பெரும் தவம் செய்து வேண்டி நின்ற முனிவர்களுக்கு வேதத்தின் பொருளை உபதேசித்து அவர்களை வீடுபேற்றினை அருளிய இடம் திருஉத்திரகோச மங்கை ஆகும்.

**திருவாதவூர்:**

மதுரைக்கு வடக்கே திருவாதவூரில் திருமறைநாதர் மூலவராக உடனுறை வேதநாயகி அம்மைக் காட்சி அளிக்கிறார். சிவபெருமான் சனி பகவானின் வாத நோயைத் தீர்த்தமையால் இது வாதவூர் எனப்பட்டது. பைரவ தீர்த்தம் (பைரவர் வாகனத்தை மறைத்து ஆடிய திருவிளையாடலால் தோன்றியது) மேலும் மாணிக்கவாசகருக்கு தனிக்கோவில் ஒன்று உள்ளது. இறைவன் அடிகளுக்கு அருள் புரியும் வண்ணம் நரியைக் குதிரையாக்கிக்கொண்டு அதன் மீது வந்து அவர் பாத சிலம்புகள் ஒலிக்க வந்து நின்ற இடம் திருவாதவூர்.

**திருப்பெருந்துரை:**

ஆவுடையார் கோவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் திருப்பெருந்துறையில் உள்ளது. மூலவர் ஆத்மநாத சுவாமிகள் ,ஆவுடையார் தாயார் யோகாம்பாள் ஆவார். தமிழக ஆலயங்களில் ஆவுடையார் கோவிலில் உருவ வழிபாடு இன்றி அருவ வழிபாடு நடைபெற்றுவருகிறது. ஒரே கல்லினாலான சங்கிலி உள்ளது. இது அக்கோவிலின் கட்டிடக்கலையை எடுத்துரைக்கிறது. அக்கோவில் பூதகணங்களால் கட்டப்பட்டது என நம்பப்படுகிறது. இக்கோவிலில் மாணிக்கவாசகர் ஜோதியில் கலந்ததால் தீப ஆரத்தி தருவது இல்லை (சிதம்பர நடராஜர் கோவிலைப் போல்) மற்றத் தலங்களைப் போல அல்லாமல் இங்கு இறைவனுக்கு புழுங்கல் அரிசி சோற்றோடு பாகற்காய், கறி, கீரை போன்றவையும் படைக்கப்படுகிறது. ஆறுகால பூசையும் அங்கு நடைபெறுவதால் அமுது படைக்கும் அடுப்பின் நெருப்பு அணைந்ததேயில்லை.

**ஓரியூர்:**

சேயுமானவர் மட்டுவார் குழலித் தாயாரோடு வீற்றிருக்கிறார். திருத்தலத்தில் பனை மரம் தல விருட்சமாகவும் சிவகங்கை தீர்த்தமாகவும், கொண்டுள்ளது. சிவபெருமான் பாலனாக திருவிளையாடல் நிகழ்த்திய தலம். கௌரி என்ற சிவ பக்தி மேம்பட்ட பெண்ணிற்காக இறைவன் வயோதிகராய் யாசிப்பவராய் வந்து பின் இளைஞனாய் நின்று குழவியாயும் மாறி ஆட்கொண்டார். சிவ பக்தி நிறைந்த பெண்ணிற்காக சேயாக அவதாரம் கொண்டதால் சேயுமானவர் என்று அழைக்கப்படுகிறார்.

**பாண்டூர்:**

பாண்டூர் வைத்தியநாத சுவாமிகள் தாயார் பாலாம்பிகை ஆவார். இவ்வூர் நாகப்பட்டினம் மாவட்டம் பாண்டூரில் உள்ளது. இக்கோயில் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஒருகாலப் பூசை மட்டுமே இங்கு வழக்கம், சீர்காழி வைத்தீஸ்வரன் கோவிலுக்கு முன்பாக கட்டப்பட்ட தலமாக உள்ளதால் மூலவருக்கு ஆதி வைத்தியநாதர்

எனப் பெயர். காந்தாரி இட்ட பாண்டு என்கிற ரோகத்தை தீர்க்க எழுந்து செல்ல இயலா நிலையில் இருந்தவர்கள் அங்கு எழுந்தருளிய சிவனை 45 நாட்கள் பூசித்து ரோகம் தீர்த்து அருள் பெற்றனர் என்பது வரலாறு. எனவேதான் அவ்வூர் பாண்டூர் எனப்பெயர் பெற்றது.

**தேவூர்:**

தேவூர் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ளது. மூலவர் தேவபுரீசுவரர், தேவ குருநாதர், கதலிவனேசுவரர் என்றெல்லாம் போற்றப்படுகிறார். தாயார் தேன் மொழியம்மை. இங்கு வெள்ளை வாழைத் தல விருச்சமாகவும் தேவ , வருண, கௌதம, மிருத , சஞ்சீவினி தீர்த்தங்களாக உள்ளன. மாடக்கோயில் வடிவமைப்பைக் கொண்ட இது கோச்செங்கட்சோழனால் கட்டப்பட்டது. திருஞானசம்பந்தர் இத்தலத்தில் தேவரம் பாடியது குறிப்பிடத்தக்கது. மேலும் குபேரன் வழிபட்டு சங்கநிதி , பதுமநிதி பெற்றான். தேவர்கள், இந்திரன், வியாழபகவான், சூரியன் முதலானோர் வழிபட்டத் தலமாகும். தேவூரை ஆண்ட செங்கோலன் மறைந்தப்பின் இறைவன் அரச உருவுத்தாங்கி ஆண்டான் என்பது வரலாறு.

**திருவிடைமருதூர்:**

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது, மூலவர் மகாலிங்கேசுவரர் தாயார் சந்தரஜாம்பிகை ஆவார். மருத மரம் தல விருட்சமாகவும் காருண்ய அமிர்த தீர்த்தமாகவும் கொண்டது. இத்தலத்தை சைவ சமயக் குரவர்கள் நால்வரும், கருவூரார் பட்டினத்தார் ஆகியோரும் பாடியுள்ளனர். வரகுணப் பாண்டியனின் குதிரைக் காலால் மிதிப்பட்டு இறந்த அந்தணரின் சாபமான பிரம்மஹத்தி தோஷம் நீக்கிய தலம் என்பது வரலாறு. பிரதான கிழக்கு வாயில் வழியாகச் சென்று மேற்கு வாயில் வழியாக வெளியேறுவது அங்கு வழக்கமாக உள்ளது. சுயம்பு லிங்கமாக காட்சியளிக்கிறார்.மார்கண்டேய முனிவருக்கு அவரின் விருப்பப்படி அர்த்தநாதீஸ்வரராக காட்சிக் கொடுத்தார்.

**திருவேகம்பம்:**

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலே திருக்கச்சியேகம்பம் எனக் குறிக்கப்படுகிறது. காஞ்சிபுரம் நகரில் உள்ள இத்தலம் பஞ்சபூதங்களில் நிலம் சார்ந்தது .மூலவர் ஏகாமபநாதர் தாயார் காமாட்சி அம்மன் இங்கு தலவிருட்சம் மாமரம் சிவகங்கை தீர்த்தமாக உள்ளது. சமயக்குரவர் மூவரால் பாடல் பெற்றத் தலம். திருக்குறிப்புத் தொண்டர், ஐயடிகள் காடவர்கோன் ,கழற்சிங்கர் ஆகிய நாயன்மார்கள் அவதரித்தத்தலம். சாக்கிய நாயனார் முக்தியடைந்த தலமாகும். உமையம்மை விளையாட்டாக சிவபெருமானின் கண்களை மூட உலகம் இருண்டது. அந்தப் பாவத்தை தீர்க்க இறைவியை இறைவன் காஞ்சி சென்று கடும்தவம் புரிக என ஆணையிட்டார். அவ்வாறே இறைவி கம்பையாற்றில் மணல் லிங்கம் செய்து வழிபட ஒருநாள் கரைகடந்த கம்பை லிங்கத்தை மூழ்கடிக்க முன்வர அந்த லிங்கத்தை ஆரத்தழுவிக்கொண்டார் இறைவி . அப்போது இறைவன் வெளிபட்டு இறைவியை மணந்தார் என்பது வரலாறு.

**திருவாஞ்சியம்:**

திருவாஞ்சியம் திருவாரூர் மாவட்டத்தில் உள்ளது. மூலவர் வாஞ்சி நாதேசுவரர் தாயார் மங்கள நாயகி ஆவர். சந்தனம் மரம் தலவிருச்சம் குப்த கங்கை தீர்த்தமாகவும் உள்ளது. காசியை விட சிறப்பானத் தலம் என்று புகழ்ந்து கூறப்படுகிறது. இத்தலத்தில் திருமாலும் எமனும் சிவனை வழிபட்டனர். இத்தலத்தை வழிப்பட்டால் எமவேதனை இல்லை என்பது நம்பிக்கை. இத்தலத்தில் எமன் சேத்திர பாலகனாக இறைவனால் நியமிக்கப்பட்டார்.

**கடம்பூர்:**

திருக்கடம்பூர் - மேலக்கடம்பூர் கடலூர் மாவட்டத்தில் உள்ள மேலக்கடம்பூரில் அமைந்துள்ளது. தேவாரப் பாடல் பெற்றத்தலம் இத்தலத்தில் மூலவர் அமிர்தகடேசுவரர் தாயார் சோதிமின்னம்மை ஆவார். முதலாம் குலோத்துங்க சோழனால் கட்டப்பெற்றது. திருப்பாற் கடலைக் கடைந்தபோது வந்த அமிர்த கலசத்தை பூலோகத்தில் இருந்து எடுத்துவர சிந்தியத் துளியே கடம்பவனத்தில் பட அதுவே சுயம்பு லிங்கமாக உருவானது என்பதும் ஐதீகம்.

**ஈங்கோயில்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறியில் உள்ளது. திருவிங்கநாதமலை மரகதாசலேஸ்வரர் கோயில் என்று அழைக்கப்படுகிறது. தேவாரப்பாடல் பெற்ற தலமாகும். அகத்திய மாமுனி ஈயின் வடிவில் வழிபட்ட தலம் என்பது இதன் தனிச்சிறப்பு. இந்த மலை மரகதமலை என்றும் அழைப்பர். நக்கீரதேவ நாயனார் இத்தலச் சிறப்பை ‘திருஈங்கோய்மலை எழுபது’ என்னும் நூலில் பாடியுள்ளார். ஆதிசேஷனும் வாயுவும் போரில் ஈடுபட்டபோது மேருமலையில் இருந்து வெளிவந்த மரகதமே இம்மலை என்னும் வரலாறும் உண்டு.

**திருவையாறு:**

தஞ்சையில் திருவையாறு பேரூராட்சியில் உள்ளது. திரு - ஐந்து - ஆறு ஐந்து ஆறுகளாக பிரிந்து செல்வதால் இப்பெயர் பெற்றது. ஐயாறப்பருக்கு வழிபாடு செய்யும் 24 ஆதிசைவப் பார்ப்பனரில் ஒருவர் காசி விடுத்த போது 23 பேரும் அவர் அவருக்குரிய காணியையும் கைக்கொள்ள அவர் மனைவி இறைவனிடம் முறையிட இறைவனே பார்ப்பனராக வந்து காணியை மீட்டுக்கொடுத்தார். இதையே ‘ஐயா றதனில் சைவன் ஆகியும்’ என்று குறிப்பிடுகிறார்.

**கழுமலம்:**

கழுமலம் என்னும் சீகாழியில் திருவுருவினை காட்டியவன். ஞானசம்பந்தரும் தேவாரத்தில் ‘ கழுமல வள நகர் பெண்ணின் நல்லாளோடும் பெருந்தகை இருந்ததே’ என்று குறிப்பிடுகிறார். மயிலாடுதுறை மாவட்டத்தில் சீர்காழி வட்டத்தில் அமைந்துள்ளது.பிரளய வெள்ளத்தில் தோணியாக மிதந்து சீகாழி இதனால் இவ்வூர் தோணிபுரம் என்றும் அழைக்கப்படுகிறது. திருக்கழுக் குன்றத்தில் நீங்காது நின்றும் அறநூல் பொருள்களை

திருப்புறம்பயத்தில் ஓதி நின்றவர். மேலும் திருக்குற்றாலத்தில் அடையாளமாய் அமையும் பெருமைக்குரியவர்.

**முடிவு:**

இறைவழிபாடு என்பது ஆன்மவோடு கலந்தது .நம்மை இறைவனோடு ஒன்றிணையச் செய்ய கலமாக அமைவது திருத்தலங்களே அவ்வாறாக கீர்த்தித் திருஅகவல் பதிகத்தின் வழி பல்வேறு சிவத்தலங்களையும் அதில் இறைவன் இயற்றிய அற்புதங்களையும் காணமுடிந்தது. அவனருளாலே அவன்தாள் வணங்குவோம்.

**துணைநூல் பட்டியல்:**


1. திருநாவுக்கரசு.ச - சிவப்பிரகாசர் நோக்கில் நால்வர் - உலகத் தமிழ்ச் சங்கம் , முதற்பதிப்பு 2012.
2. திருவாவடுதுறை ஆதினம் - திருவாசகம்.
3. மறைமலையடிகள் - திருவாசக விரிவுரை (நான்கு அகவல்கள்) - சிவாலயம் பதிப்பகம் 2017
4. மாணிக்கவாசக சுவாமிகள் - திருவாசகம் (எட்டாம் திருமுறை) - சிவனடியார் திருக்கூட்ட அறக்கட்டளை